# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



கடந்த புதனன்று சென்னையில் - தென்னிந்திய நடிகர் சங்கத்தில் மறைந்த நடிப்பிசைப் புலவ
திருவுருவப் படத்தை முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார். புரட்சி நடிகர் முதலியோர்
இரங்கல் உரையாற்றினார்கள்.

29 - 8 - '71

விலை: 20 காசு




## இந்தியாவும் வென்றது!

அடேயப்பா! அடேயப்பா!! அடேயப்பா!!! இந்தியாவினுல்கூட ஒரு உலக நாட்டுக்குச் சென்று, சென்றடைந்த நாட்டின் சிகையைப் பிடித்துக் குலுக்கி, உலுக்கி விட்டு வரமுடியும் என்று இப்போது நம்ப வேண்டிய ஒன்ருகி விட்டதே! கிரிக்கெட் விளையாட்டில், இங்கிலாந்து நாட்டுக்கு நிகர், இங்கிலாந்துதான் என்று இது வரையில் இருந்து வந்த பெருமையையும், புகழையும், இந்தியா இப்போது பெருமைப் படத்தக்க முறையில் தட்டிப் பறித்துக் கொண்டுவிட்டிருக்கிறது, ஒரு புதுமைதான்! சிங்கத்தை, அதன் குகையிலேயே சென்று வென்று வருவது என்பது எளிதானதல்ல! வென்று விட்டார்களே இந்திய கிரிக்கெட் குழுவினர்! இந்தியாவின் இந்த வெற்றி, இனி எல்லாத் துறைகளிலும் பரவ வேண்டும்; பரவுவதற்குப் பாடுபட வேண்டும். சபாஷ்சந்திரசேகர்! என்றுபாராட்டாமலிருக்க முடியுமா அவரது குழுவை!

## ஐயோ, அமெரிக்காவே!

வியட்நாமிலிருந்து, போர்க் கருவிகள், பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகின்றன என்று, செனட்டர் கென்னடி, இந்தியாவில் கூறிய குற்றச்சாட்டை, அமெரிக்காவின் இந்தியத் தூதர் கென்னத் கீட்டிங் மறுத்திருக்கிருர். மார்ச் 25-க்கு முன்பு ஏற்பட்ட ஒப்பந்தங்கள் அடிப்படையில்தான் ஆயுதங்கள் அனுப்பப்படுவதாக மறுபடியும் உறுதி செய்திருக்கிருர். கூடவே, இந்தியாவுக்கு வந்துள்ள கிழக்கு வங்க அகதிகள், பாதுகாப்பாக, பத்திரமாக தங்கள் தாயகம் திரும்ப வேண்டும் என்றுதான் அமெரிக்கா விரும்புகிறது என்றும் சொல்லி இருக்கிருர்! தொட்டிலையும் ஆட்டிவிட்டு, தொடையையும் கிள்ளிவிடுவது என்பது பழமொழி. இராணுவ ஆயுதங்களையும் அமெரிக்கா அனுப்புமாம்! அகதிகள்மீதுஅனுதாபமும் காட்டுமாம்! நாமும் நம்பிக்கொண்டிருக்கவேண்டுமாம்! ஐயோ அமெரிக்காவே! என்று சொல்லத் தோன்றுகிறதில்லையா!

## எவ்வளவோ இருக்கிறதே!

கிழக்குவங்கத்தில், சென்ற மார்ச் திங்கள் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தெரிந்தெடுக்கப்பட்ட அவாமிலீக் கட்சி உறுப்பினர்களது தேர்வு செல்லாது என்று 79 பேர்களை, பதவி நீக்கம் செய்து அறிவித்த பின்பு, வருகிற செப்டம்பர் திங்களில், அந்த 79 இடங்களுக்கும் தேர்வு நடக்கும் என்று அதிபர் யாகியாகான் அறிவித்திருந்தார்! ஐயோ பாவம்! இப்போதைய நிலைமையில், அந்த 79 இடங்களுக்கும் வேட்பாளர்களைப் பொறுக்க படாதபாடுபடுகிருராம்! தேர்தலில் நிற்க யாரும் முன்வர மறுக்கிருர்களாம்! இதனுல் செப்டம்பரில் இடைத் தேர்தல் நடைபெருது என்றும் நம்பப்படுறதாம்! சர்வாதிகாரத்தின் சவுக்கடி இந்த வகையில் மட்டும் திருப்பித் தாக்கும் என்பதல்ல—இன்னும் எதிர்பார்க்கவேண்டுவது எவ்வளவோ இருக்கிறதே!

## நல்ல இலக்கியம்தானே!

ஆடு நனைகிறதே என்று ஓநாய் ஒப்பாரி வைத்ததாம்! என்ற பழமொழிக்கு இதுவரையில் இலக்கியம் காணுதிருந்தவர்களுக்கு இப்போது ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது! இலங்கை நாட்டுக்குள்ளே இப்போது, தமிழர் சிங்களவர்; தமிழ் — சிங்களம் ஆகிய பிரச்னைகள் பூதாகாரமான வடிவமெடுத்து நாளும் நாளும் விரும்பத் தக்க செய்திகளை ஏடுகள் ஏந்தி வருகின்றன! இலங்கையிலிருந்து வருகின்ற ஏடுகள், இதழ்களைப் பார்த்தால், சில இடங்கள் வெறுமையாக விடப்பட்டு, அந்த வெற்றிடங்களில் இருந்த செய்திகள் தணிக்கைக்கு ஆளாக்கப்பட்டு, நிறுத்தப்பட்டன என்ற குறிப்பினைக்கண்டு திகைப்படைய வேண்டி யிருக்கிறது! அப்படிப் பட்ட ஒரு சர்வாதிகார அரசின் பிரதமர், பாகிஸ்தான் சர்வாதிகாரத்தைக் கண்டித்து, அதன் சர்வாதிகாரியான யாகியாகானுக்கு மடல் ஒன்று தீட்டியிருக்கிருராம்! அது மட்டுமல்ல கிழக்கு வங்க விவகாரத்தையே தான் தீர்த்து வைத்து விடுவதாகவும் தெரிவித்திருக்கிருராம்! எப்படி இருக்கிறது பாருங்கள்! ஆடும் ஓநாயும் கதைக்கு இது நல்ல இலக்கியம்தானே!

தொகுப்பு: சீயேயெம்.

★

★★★★★★★★★★★★★★

## தெரிந்துகொள்ளுங்கள்!

பார்ப்பதற்கு பயங்கரத்தைத் தரும் வாட்ட சாட்டமான—முரட்டுத்தனமான ஆசாமி ஒருவன்—நோஞ்சான் மாதிரி இருந்த பல வீனமான பையன் ஒருவனைப் புடைத்துக் கொண்டிருந்தான். தனதுஆத்திரம் தீர அவனை செம்மையாக உதைத்த வண்ணம் இருந்தான். அப்பொழுதும் அவனது கோபம் அடங்க வில்லை. போக்கிரியின் தாக்குதலுக்கு இரையான அச் சிறுவன் வலி தாங்கமுடியாமல் பருந்தின் காலில் அகப்பட்ட கோழிக் குஞ்சு போல் துடித்தான்—துவண்டான். ஆயினும் அம் முரடன் அடிப்பதை மட்டும் நிறுத்தியபாடில்லை.

இந்தக் கொடூரமான செயலைக் கண்ட வழிப்போக்கன் ஒருவன் "அந்த அப்பாவிச் சிறுவனை எதற்காக துன்புறுத்துகிருய்?" என்று ஆவேசத்துடனும் — அனுதாபத்துடனும் கேட்டான்!

'அதைக்கேட்க நீயார்?" என்று ஆர்ப்பரித்தான் அந்த முரடன். "ஏன் எதற்கு என்கிருயா? எந்த நோஞ்சான் வாங்கும் உதையில் சரிபாதி எனக்கும் பங்கிட்டுத்தா" என்று விளக்கம் தந்தான் அந்த விவேகி. அம் முரடனும் அந்தக் கோரிக்கையை ஏற்ரு இருவரையும் மாறி மாறி மனம் குளிர ஆசை தீர அடித்தான்! முனபின தெரியாத—இனம் புரியாத ஒருவனின் துயரத்தில் துன்பத்தில் சம பங்கு ஏற்றுக் கொண்டவன் யார் என்று கருதுகிறீர்கள்?

ஆங்கில இலக்கிய உலகில் அழியாப் புகழ்பெற்றுவிட்ட மாபெரும் கவிஞன் பைரன்தான்! முரடனின் அடிக்கு ஆளாகிய அச் சிறுவன். பிற்காலத்தில் இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரியாக ஆட்சி புரிந்த ராபன் பில் என்பவன் ஆவான்!

கலவை பா. வரதன்.

★★★★★★★★★★★★★★



# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 29—8—71 | இதழ் 7

# தனித்தியங்க விடுங்கள் !

மாணவர் சங்கங்களுக்கிடையேயான தேர்தல்கள் காரணமாக, மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு, அது கல்லூரிகளின் கண்ணாடிகளையும், ஜன்னல்களையும், மற்றும் சொத்துக்களையும் உடைத்து நொறுக்கும் அளவுக்கு மாறி, அதன் எதிரொலியாக கல்லூரி மூடப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது, சென்னையில்.

சென்னையில் மட்டுமல்லாமல், சென்ற சில ஆண்டுகளாகவே, மாணவர் சங்கத் தேர்தல்கள் காரணமாக நாடெங்கும் பரவலாக, பல கல்லூரிகளிலும் வன்முறைகள் தலைதூக்கத் தொடங்கி, பொதுச் சொத்துக்களுக்கு சேதமுண்டாக்கப்பட்டு வந்திருக்கிறது.

பல துறைகளிலும் இருப்பவர்களைப் போலவே, மாணவர் சமுதாயத்துக்கும் ஏதாவது காரணங்கள் பற்றி, பிரச்னைகள் உருவாகிக்கொண்டே வருவதும், உருவான அல்லது உருவாக்கப்பட்ட பிரச்னைகளின் வடிவம், வன்முறையில் வந்து நிற்பதும் வாடிக்கையாகிக்கொண்டே இருப்பது, துரதிருஷ்டவசமானதாகும்.

ஒரு கல்லூரியில் இருக்கின்ற எல்லா மாணவர்களுமே இதுபோன்ற அசம்பாவிதச் செயல்களில் ஈடுபட்டுவிடுவதில்லை என்றும், மிகச் சிறிய எண்ணிக்கையிலான சில மாணவர்களே ஈடுபடுகிறார்கள் என்றும், அதுபோன்ற மாணவர்கள் சிலபேரது செயல்களின் எதிரொலி, அனைத்து மாணவர்களையும் பற்றி, அந்தச் சமுதாயத்தின்மீதே களங்கத்தைக் கொண்டுவந்து சேர்ப்பித்து விடுகிறது என்றும், நாட்டின் எல்லா தரப்பட்ட அறிவாளர்களுமே அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கிறார்கள்.

விரும்பத்தகாத செயல்களுக்கு, ஊக்கம் தருகின்ற ஒருசில மாணவர்களது போக்கு கல்வியின் பொதுப் போக்கையே சீர்குலைத்துவிடுகின்றது என்பதை எடுத்துக்காட்டாமலிருக்க முடியவில்லை.

மாணவர்களது பிரச்னைகளைத் தீர்க்க, பெற்றோர்—ஆசிரியர்—மாணவர் ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழு மூலம் தீர்த்துவைக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அரிய யோசனையைச் செயல்படுத்தாமலிருப்பதனால் கூட, வன்முறைப் போக்குகள் வளர்ந்துகொண்டே வருகின்றனவோ என்றுகூட ஐயுறத் தோன்றுகிறது.

அரசும், பல்கலைக்கழக நிர்வாகமும், கல்லூரி நிர்வாகங்களும் ஒன்றிணைந்து இதுபற்றி சிந்தித்தால் நல்லது—என்று எடுத்துக்காட்டுகின்ற இதே நேரத்தில் —

> மாணவர்களும் தங்களுக்குத் தாங்களே இதுபற்றிச் சிந்தித்துப் பார்த்து, நாட்டின் பொதுத் தன்மையைக் காக்கும் கடமையிலிறங்கியாக வேண்டும்.

என்றும் எடுத்துக்காட்டுவது நம் கடமையாகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இப்போது கல்வித்துறைக்கென்று சுமார் 60 கோடி ரூபாய்கள் வரையில் ஒதுக்கிச் செயல்பட்டுக் கொண்டிருந்தும், செலவிடப்படும் அந்தப் பெரிய தொகைக்குண்டான போதுமான ஈடு, மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை, மூடி மறைத்துப் பயனில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் கொள்கைகளைத்தான் வகுத்துத்தர முடியுமே ஒழிய அதனைச் செயல்படுத்த வேண்டுவது உரிய நிருவாகத்தினரையே சார்ந்ததாகும்.

தமிழகத்தின் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் எங்கோ ஓர் ஓட்டை இருக்கிறதென்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

கல்வித் தரம் குன்றிவிட்டது என்ற கூப்பாடு ஒருபுறம் அன்றாடம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக இனப் பிரச்னை வேறு, இன்று, அந்தத் துறையில் தலைதூக்கி இருக்கிறது.

பச்சையப்பன் கல்லூரியில் ஒரு குழப்பம் என்றால், உடனே வைஷ்ணவக் கல்லூரியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டுவந்து, அந்த இனப் பிரச்னைக்கு உயிரூட்டம் நல்கப்படுகிறது.

மாணவர் சமுதாயம், தமக்குள் ஒருங்கிணைந்திருந்து செயல்படுவதனைத் தவறென்று கூறமாட்டார்கள். ஆனால், விரும்பத்தகாத காரணங்களுக்கெல்லாம் இனச் சாயம் பூசுவதும், பொதுச்சாயம் தேய்ப்பதும் தேவைதானா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு இனத்தவர், தன் இன நலனைக் கருதுவதிலே தவறிருக்க முடியாதென்றாலும், தமிழ் நாட்டின் தலைவிதி, வேறுவிதமாக இருக்கிறதென்றெண்ணி கவலைப்பட வேண்டி நேரிடுகிறது.

ஒரு பெரியார் இராமசாமியும், ஒரு பேரறிஞர் அண்ணாவும் இந்த நாட்டில் பிறவாமற் போயிருந்தால் தமிழினத்தவரின் தலையெழுத்து எப்படி மாறிப் போயிருக்கும் என்பதனை, இன்றைய தமிழ் மாணவர் உலகு நன்கு அலசிப் பார்க்க வேண்டும்.

கல்வித் துறையில், பிற இனத்தவரின் போக்கு எப்படி எப்படி மாறிக்கொண்டு வருகிறதென்பதை,

(16-ஆம் பக்கம் பார்க்க)

# நேர்மையின் புலம்பல்

கவிஞர் மணிவேந்தன்

★

எண்ணமிலா வாழ்வினிலே எழுச்சியும் உண்டோ-நல்
இதயமிலா மனிதரிடம் இரக்கமும் உண்டோ ?
திண்ணமிலா மனத்தினிலே திறமையும் உண்டோ ?-உயர்
தியாகமிலா உளத்தினிலே நேர்மையும் உண்டோ ?

வண்ணமிலாப் பூவினிடம் வண்டு செல்லுமோ?-எழில்
வதனமிலாப் பூவையின்மேல் பார்வை செல்லுமோ ?
உண்மையிலா மனிதரின்மேல் நாட்டம் செல்லுமோ? - நல்
ஒழுக்கமிலா வாழ்க்கையிலே நீதி வெல்லுமோ ?

மணமில்லா மலர்களுக்கு மதிப்பும் இல்லையே - தன்
மானமில்லா மனிதருக்குச் சிறப்பும் இல்லையே !
குணமில்லா நண்பனிடம் நட்பும் இல்லையே ! - நெஞ்சில்
கொள்கையிலாப் பிறவியிடம் நன்றி இல்லையே !

பித்தலாட்டக் கயவனுக்கு வாழ்வும் ஏதடா - சாதி
பேசுகின்ற கடையனுக்குப் புகழும் ஏதடா !
தத்துவத்தில் பொய்கலந்தால் நன்மை ஏதடா - நிலை
தடுமாறும் மூடனுக்குத் தலையில் ஏதடா ?

பொருளின்றி வள்ளளாக வாழ்ந்தவர் இல்லை - என்றும்
பொறுமையினைப் போற்றியுமே தாழ்ந்தவர் இல்லை !
அருளின்றித் தலைவராக ஆனவர் இல்லை - அக
அழகுடைய உத்தமர்கள் சாவதும் இல்லை !






## [23]

## கழுத்தை நெறித்தது கயமை!

முதலமைச்சர் முத்து முடியார், தம் மாளிகையின் கூடத்தில் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார். அவரது இருகரங்களேயும் பின்புறம் சேர்த்துக் கட்டிக்கொண்டிருந்தார். ஒருபுறம், தளபதி தியாகராயரும், இன்னேர்புறம் மெய்க்காவல் வீரன் மேனி விடங்கனும் நின்றுகொண்டிருந்தார்கள், அனைவரது முகத்திலும் ஏதோ ஒருவகையான பீதி குடிகொண்டிருந்தது; அது வெளிப்படையாகவே தெரிந்தது.

முதலமைச்சரின் தேவி, அருங்குணம் ஒரு பக்கத்தில் இருக்கை யொன்றின்மீது சோர்வுடன் அமர்ந்திருந்தார். அவரது முகத்தடத்தில்கூட, அச்சத்தின் ரேகைக் கீற்றுக்கள் பரவிக் கிடந்தன.

தளர்நடையை அசைபோட்டுக் கொண்டிருந்த முத்துமுடியாரை சட்டென்று நிறுத்தியது தளபதியின் குரல்.

"இந்த மௌனம், வினவுக்கு விடையாகிவிடாது என்பதை அமைச்சர் அவர்கள் அறியமாட்டார்களா என்ன?" என்ருர் தளபதி.

"உமது உணர்ச்சியினை நான் உணர்கிறேன் தளபதியாரே! உமது விஞ, என்னைச் சார்ந்ததாக இருந்திருந்தால், இதற்குள் உம்மைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்திருப்பேன்; மன்னரைப் பற்றிய விஞவை, என்னிடம் கேட்டிருக்கிறீர்கள்! மன்னர் எங்கே போய் இருக்கிருர்? உம்முடைய இந்த விஞவுக்கு, உடனே நான் எப்படி பதில் தர முடியும்? என்னை, நானே இந்தக் கேள்வியை எழுப்பி, பதில் தேடிக் கொண்டிருக்கிறேனே" என்ருர் முத்து முடியார்.

"பயணம் மேற்கொள்வதற்கு வசதியாக தேர் ஒன்றைத் தயாரில் இருக்கச் செய்தது நீங்கள்தானே அமைச்சர் அவர்களே!" அமைச்சர்மீது இந்தக் குற்றச்சாட்டை எடுத்து வீசிஞர் தியாகராயர்.

"மறுக்கவில்லையே நான்! அதிகாலையில், கூப்பிட்டனுப்பி, பயணம் மேற்கொள்ளத்தக்க வகையில், ஒரு தேரை தயாரிலிருக்கச் செய்யும்படி மன்னரே கூறிஞர். ஏன்? எதற்கு? எங்கே போகிறீர்கள்? என்று மன்னரிடம் கேட்க, ஒருகால் உம்மால் முடியுமோ என்னவோ! என்னுல் இயலவில்லை" என்று சூடாகப் பதில் தந்தார் முத்துமுடியார்!

"நீங்கள் கொபித்துக் கொள்ளக்கூடாது அமைச்சர் அவர்களே! மன்னரைப் பற்றி நம் அனைவருக்குமே அக்கறை இருக்கிறது."

"உங்களுக்கும் அந்த அக்கறை இருக்கிறது என்று எடுத்துக் காட்டியதற்கு, நான் நன்றி கூறிக் கொள்ளத்தான் வேண்டும்! தளபதியாரே! பூபதியின் மரணத்தால், இந்த அரண்மனை முழுதும் சோகச் சூழ்நிலையில் மூழ்கியது உண்மைதான்! உமது மருமகன் என்கிற வகையில் நீர், அதிகமாக வருந்தினீர்கள் என்பதும் நியாயமானதுதான்.: ஆனுல் அந்த மரண அமைதி, அரண்மனையை முழுதாக ஒரு கிழமைக்கும் மேலாக நீங்காது நிலவிக் கொண்டிருந்ததற்கு யார் காரணம்? நீங்கள் அல்லவா! நந்திமித்திரனைப் பிடித்து மாவலிக் கங்கைக் கரையிலே சூலம் நிறுத்தி, அதிலே அவனது தலையைச் செறுகிவைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள்! அவன் பிடிக்கப்பட்டபோது, மன்னரே அவனை மன்னித்து—எச்சரித்து விடுதலை செய்துவிட்டார்கள்! முடிந்து போன விவகாரம் அல்லவா அது? பூபதி மறைந்த பின், அந்த ஆத்திர உணர்ச்சிக்கு நீங்கள் தீனியிட்டு விட்டீர்கள்! ரோகணரடாவுக்குப் போய், அவனைப் பிடித்துவந்து சித்திரவதை செய்துவிடப் போவதாக, அரண்மனைக்குள்ளேயே பிதற்றிக் கொண்டிருந்தீர்களே! அது ஏன்? மன்னரது தீர்ப்பை மதியாத போக்கு அல்லவா அது?"

"நீங்கள் பிரச்னையை திசை திருப்பி விடுகிறீர்கள் என்று நினைக்கிறேன்! பூபதியின் மரணம் என்னை அலைக்கழித்தது உண்மைதான்! ஆனுல், அதனுல் நான் எங்கே சோர்ந்து விடுவேனே என்று எனக்கே எழுந்த ஐயத்தால், இரண்டாம் நாளே, நான் எதுவுமே நடைபெறவில்லை என்கிற நிலையில் என்னை மாற்றிக்கொள்ள நினைத்தேன்! முயன்றேன்! அனுராதபுரத்தின் எதிரியாகி இருக்கும் நந்திமித்திரனைக் கொன்றுபோட்டு விட்டால், இந்த நாட்டின் அமைதி, நிரந்தரமாகிவிடும் என்று கூறினேன்! ஆனுல், மன்னரது போக்குக்கும், எனது பேச்சுக்கும் பிணை போடுகிறீர்கள் நீங்கள்!" என்ருர் தளபதியார்.

முத்துமுடியார், தளபதியின் அந்த விளக்கத்தைக் கேட்டுக்கொண்டே, தன் துணைவி அருங்குணம் அமர்ந்து கொண்டிருந்த இடத்துக்கு வந்து, அருகே அவரும் அமர்ந்துகொண்டு "நான் பிணைபோடவில்லை தளபதியாரே! உம்முடைய அந்தப் பேச்சுதான், அரண்மனையின் நீடித்தஅமைதிக்குக் காரணம் என்று நான் யூகித்து முடிவெடுத்திருக்கிறேன்!" என்று கூறியபோது, அருங்குணம் குறுக்கிட்டு "தளபதி அவர்களே! உணர்ச்சிப் பெருக்கில் நீங்கள் எதனை எப்போது செய்வீர்கள் என்பதனைக்கண்டறிய முடியாது என்று மன்னர் அவர்கள் அடிக்கடிக் கூறிக் கொண்டிருப்பதனை, இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைவுபடுத்துவது நல்லது என்று நினைக்கிறேன். ரோகணரடாவுடன் ஒரு போர் ஏற்படுவதனைத் தடுத்து நிறுத்த முடியுமா? என்கிற முறையில் மன்னரது சிந்தனைகள் போய்க் கொண்டிருக்கின்றன

என்பதனை நீங்கள் அறிவீர்களா? அத்தகைய சிந்தனைப் போக்குக்கு, உங்களது பேச்சுக்கள் முரண்பாடானவைகள் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"அம்மையார் அவர்கள் குறிப்பிடுவது பற்றி நான் நன்கு அறிவேன் அமைச்சர் அவர்களே! அப்படிப்பட்ட கருத்திலேஇருக்கும் மன்னர், என்னைக் கூப்பிட்டனுப்பி, என்னிடம் விளக்கம் அல்லவா அளித்திருக்கவேண்டும்? என் முயற்சிகளுக்குத் தடையல்லவா விதித்திருக்க வேண்டும்?" என்று கேட்டார் தளபதியார், முத்துமுடியாரை நோக்கி.

முத்துமுடியாருக்குச் சிரிப்பு வந்துவிட்டது! மிகச் சிரமப்பட்டு அதனை அடக்கிக்கொண்டு, 'ஏன் தளபதியாரே! மன்னர் அவர்கள் வந்து உம்மிடம் விளக்கம் தந்திருக்க வேண்டுமா?" என்று கேட்டார்.

தியாகராயரது உள்ளத்தில் முள் தைப்பது போலிருந்தது அந்த வினா. தான் அதுபோல் கூறியிருக்கக்கூடாது என்பதை கணத்தில் புரிந்துகொண்டார் தியாகராயர். "அமைச்சர் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று மட்டும் பேசி நிறுத்திக் கொண்டார்.

"தளபதியாரே! மன்னிக்க வேண்டிய அளவுக்கு நீங்கள் பிழைபடப் பேசிவிடவில்லை. எனினும் எந்த ஒருவரும், எந்த ஒருவரிடமும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சொற்களை உதிர்க்குமுன், அவற்றின் விளைவு, பயன் முதலியவைகளைக் கணக்கிட்டு, அளவோடு உகுக்க வேண்டும்! அதிலும் உம்மைப் போன்ற உயர்ந்த பதவியிலிருப்பவர்களுக்கு அதுபோன்ற நிதானம் அதிக அளவுக்குத் தேவை! தளபதியாரே, நீங்களே ரோகணவுக்குப் போய், அந்த நந்திமித்திரனைப் பிடித்துவரப் போவதாக நீங்கள் இங்கே பேசிக் கொண்டுதான் இருந்தீர்கள். அது மன்னர் அவர்களுக்கு எப்படியோ தெரிந்து போய்விட்டது. ஆனால், மன்னர் அவர்கள் ஏதாவது மறுமொழி பேசினார்களா? பூபதியின் மரணத்தால் பூத்த அமைதியுடன், இதனையும் இணைத்துக்கொண்டு, உம்மை மட்டுமல்ல; என்னை மட்டுமல்ல; இந்த அரண்மனையையே முழு அமைதியுடன் இருக்கச் செய்துவிட்டார்கள். மரண அமைதியாகவே இருக்கட்டும் என்று செய்துவிட்டார்கள். தளபதியாரே! இதற்கு நீங்கள் அல்லவா காரணம்?" என்று கேட்டு நிறுத்தினார்.

தியாகராயர் பதில் சொல்லு முன்பு குறுக்கிட்டு, அருங்குணத் தேவியார், "அது போகட்டும், மன்னர் எங்கே போயிருக்கக் கூடும்? என்பது பற்றி யோசிக்கலாமே!" என்றார். அதுவரையில் யாருடனும், எந்தப் பேச்சும் கொடுக்காமல், மற்றவர்கள் பேசுவதிலேயே கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மேனிவிடங்கன், முதலமைச்சரைப் பார்த்து, "பிரபு! பயணத்துக்குத் தேர் ஒன்றை ஏற்பாடு செய்யும்படிக் கூறிய மன்னர் அவர்கள், தேவியார் தேரில் ஏறி அமர்ந்ததும் மறுபடியும் கீழே இறங்கச் சொல்லி, தேரோட்டியிடம் குதிரை கொண்டு வரக் கூறி, அதிலேயே இருவரும் போயிருக்கிறார்களே, அதற்கான காரணம் பற்றியும் நாம் யோசிக்க வெண்டுவது அவசியம் என்று கருதுகிறேன்" என்று தனது கருத்தையும் சொல்லி வைத்தான்.

"அது மட்டுமில்லை; அவர் ஏன் மெய்க்காவல் வீரர்கள்கூட வரத் தேவையில்லை என்று தனியாக தேவியுடன் மட்டும் போனார் என்பது பற்றியும் நாம் யோசிக்கத்தான் வேண்டும்" என்று மேனிவிடங்கனைப் பார்த்துக் கூறிய முத்துமுடியார், தன் துணைவியைப் பார்த்து "உனக்கு ஏதாவது புரிகிறதா குணா?" என்றார்.

"மன்னர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் உங்களுக்கே அவைபற்றியெல்லாம் புரியாதபோது, நான் அந்த புதிரைப் பற்றி விளக்கிவிட முடியும் என்று நம்பவில்லை பிரபு!' என்று கூறினார் அருங்குணத் தேவி.

"தமிழர்களது ஆட்சியை எதிர்ப்பது என்பதன் பேரால் இங்கே சைவ மதத்திற்கு எதிரான கிளர்ச்சிகளைத் தூண்டிக் கொண்டிருப்பதுடன், பௌத்தர்களுக்கு எதிராக நாம் செயல்படுவதாகக் கூறி குழப்பங்களையும் சில சிங்களவர்கள் உண்டாக்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மன்னர் அவர்கள் தனித்துப் போயிருப்பது விரும்பத்தக்கதல்ல; அவர் சென்றிருக்கும் இடத்தை உடனே நாம் கண்டுபிடித்து பாதுகாப்புப் படைவீரர்கள் சிலரையாவது அங்கே அனுப்பிவைக்க வேண்டும்" என்று தன் உள்ளக் கிடக்கையை உருக்கத்துடன் எடுத்துக் காட்டினார் தளபதி தியாகராயர். அவர் கூறியதைக் கேட்டதும், அனைவரும் ஒரு வினாடி வருந்தியதுடன், முத்துமுடியார் "ஏற்பாடுகளைச் செய்வோம்! தளபதியாரே நீங்கள் மட்டும் சில நாட்களுக்கு அமைதியாக இருக்கவேண்டும்." என்றார்.

"அப்படியானால் நான் பதவியைத் துறந்துவிடுவது பற்றி மீண்டும் யோசிக்கத்தான் வேண்டியிருக்கும்!" என்றார் தளபதியார்.

"இதுபோன்ற உணர்ச்சி மிகுதியைத்தான் மன்னர் தங்களிடம் வெறுக்கிறார் தளபதியாரே!" என்று தளபதியைப் பார்த்துக் கூறிவிட்டு தன் துணைவியைப் பார்த்து "மன்னர், தளபதியார் தம் பதவியைத் துறக்கச் சம்மதிப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை" என்றார் அமைதியாக.

"ஒன்று என்னைச் சாக அனுமதிக்க வேண்டும்; அல்லது வாழவாவது விடவேண்டும்; என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறீர்கள்!" என்று கூறிவிட்டு "நான் வருகிறேன் அமைச்சரே!" என்று சொல்லிக்கொண்டே திரும்பி நடக்கத் தொடங்கினார் தியாகராயர்.

முத்துமுடியார் இருக்கையை விட்டு எழுந்துகொண்டே, "அப்படியெல்லாம் தற்கொலைக்கு முயற்சி செய்து விடாதீர்கள் தளபதியாரே!" என்று சொன்னார். அச் சொற்கள் தளபதியாரின் செவிப்பறைகளை எட்டினவோ, என்னவோ! அவர் போய்விட்டார்.

தியாகராயர் போனதும், மேனி விடங்கனை அழைத்துக்கொண்டு தியாகராயர் அரண்மனையின் பக்கம் புறப்பட்டார்.

வழியில் தியாகராயரைத் தேடிக்கொண்டு ஒற்றன் ஒருவன் வேகமாக வந்துகொண்டிருந்ததைக் கண்டு, மேனிவிடங்கனை அரண்மனைக்குச் சென்று இருக்குமாறு பணித்தார். மேனிவிடங்கன் அவ்விடம் விட்டகன்றான். சில வினாடிகளில் ஒற்றன் அங்கு வந்து சேர்ந்ததும், அவனை அழைத்துக்கொண்டு, அருகே இருந்த பூங்காவொன்றில் நுழைந்து, அங்கே அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

"ஊம்! மன்னர் எங்கே போனார் என்கிறாய்?" என்றார், ஒற்றனைப்பார்த்து.

"மன்னர்பிரான் அவர்கள், நேராக தம்பளை கிராமத்துக்குத்தான் பிரபு சென்றிருக்கிறார்கள். தேவியார் அவர்களுடன், குகைக் கோவிலுக்குள் நுழையும் வரையில், நானும் உலகாயதனும் மன்னர் அவர்களைத் தொடர்ந்தோம். குகைக் கோயிலைச் சுற்றிப் பார்ப்பதற்குத்தான் அவர்கள் சென்றிருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். மன்னர் அவர்களது நிழலாக இப்போது உலகாயதனை விட்டு விட்டு, தகவல் தர நான் ஓடோடி வந்தேன்" என்றான் ஒற்றன்.

"அப்படியா! சரி, மறுபடியும் அங்கேயே போய் கண்காணித்துக்கொண்டிரு" என்று அவனை அனுப்பினார் முத்து முடியார்.

ஒற்றன் புறப்பட்டுப் போனதும், எண்ணங்களை அசை போட்டுக்கொண்டே அரண்மனைப் பக்கம் திரும்பி நடக்கத் தொடங்கினார்.

தம்பளை குகைக் கோயில் என்றால், காட்சிகளைக் காண்பது கண்ணுக்கு விருந்துஎன்று கருதுவோருக்கு களிப்பூட்டக் கூடிய ஒரு இடம்!

தூரத்திலிருந்து பார்க்கும்போது அதன் தோற்றம் வியக்கத்தக்கதாக இருக்கும். பூதாகாரமான மலைப்பாறையொன்று கீழே கவிழ்ந்து கிடப்பது போன்ற காட்சி, ஒன்றுமட்டும் நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம் என்று கூறத்தக்க விதத்திலே இருக்கும்.

ஆனால், கவிழ்ந்துகிடப்பது போன்ற அதன் காட்சி, பாறையின் மேலே ஏறி நின்று பார்க்கும்போது நீண்ட கருங்கல் துண்டு ஒன்று அங்கே கிடத்தப்பட்டிருப்பதைப் போல காணும்! எவ்வளவு பெரிய முரண்பாடு அமைப்பு! எவ்வளவு விசித்திரமான கோலம்!

குகையின் அமைப்பையும் அதற்குள் நுழையும் முகப்புத் தோற்றத்தையும் காணுகின்ற எவரும் அது ஒரு குகை என்று கூறமாட்டார்கள்! சித்திர வேலைப்பாடுகள் மிகுந்த ஒருமண்டபத்துக்குள்ளே நுழையும் உணர்வினைத்தான் எவரும் பெறுவர்.

உள்ளே துணிந்து நுழைந்து விடுபவர்கள் மிகுதியும் எச்சரிக்கையுடன்இல்லாவிட்டால், எங்கேயாவது ஓரிடத்தில் அதன் மேல் பாகத்தில் முட்டிக்கொள்ள வேண்டி நேரிட்டுவிடும்!

பகல் பொழுதே யானாலும்கூட, ஆங்காங்கே கவிந்திருக்கும் இருட்போர்வை அங்கே காணப்படும் சித்திரக் கோலங்களை மூடி மறைத்துக் கொண்டிருக்கும்.

குகையின் வாயிலில் வந்து நின்று எள்ளாளப் பேரரசரும், சோழ தேவியாரும் ஒரு கணம், அதன் முகப்புத் தோற்றத்தைக் கண்டு களித்தார்கள்.

குகையின் வாயிலில் இருந்தகாவலர்கள் இருவர், அவர்கள் யாரென்று அறியமாட்டார்கள் ஆயினும், குகையினைப் பார்க்க வந்திருக்கும் யாத்திரிகர்கள் என்று கருதி இன்று தங்களுக்கு நல்ல வேட்டை கிடைத்துவிட்டதென்ற மகிழ்வில், தீவர்த்தியினைக் கொளுத்தித் தயாரிலிருந்தார்கள்.

பார்வையின் மூலமே ஒருவனை முன்னே செல்லுமாறு பணித்துவிட்டு, இன்னொருவனை பின்னே வருமாறு வாய்விட்டுச் சொல்லிவிட்டு மன்னர் நடக்கத் தொடங்கினார்.

குகையின் உள்ளே நுழைந்ததுமே, தேவியார், அவர்களை ஆசி கூறி நல்வரவேற்கும் பாவனையில் அமைக்கப்பட்டிருந்த அருகத் தேவனின் சிலையைக் கண்டு வாய் பிளந்து நின்றுவிட்டார்!

★ Matchless Quality
★ Intricately Woven
★ Colourful, And lively

Co-optex

HANDLOOM FABRICS

Cost a lostless... Last a long time

Tamil Nadu Handloom Weavers'
Co-operative Society Ltd.,
(Balasundaram Buildings)
34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.

# சுவைத்ததைச் சொல்கிறோம்

சோழமாதேவி—தொடர்கதை, படிக்கப் போர் அடிப்பதாக யாரோஒருவர் எழுதி இருந்தார். அவருடைய சுவையுணர்வின்மீதே எனக்கு ஐயம் ஏற்படுகிறது.

தெ. செந்தில், இராசிபுரம்

திரு. ராஜி மணாளன் அவர்களது ‚‚சோழமாதேவி'' யின் வீறு நடையும், திறன் செறிந்த கதையை நடத்திச் செல்லும் பாங்கும் கண்டு, பொருமைகொண்ட நெஞ்சத்தின் ஓலமாகத்தான் தெரிகிறது, சோழமாதேவி ‚போர் அடிக்கிறது' என்ற கருத்து.

பொ. மு. கருப்பண்ணன், திருவாரூர்

சோழமாதேவி தொடர்கதை, போர் அடிக்கிறதென்று சொல்லக்கூட ஒருவர் இருக்கிறாரா? கீழ்ப்பாக்கத்திலிருந்து வந்த கடிதமா அது? அஞ்சல் முத்திரையைக் கவனித்தீர்களோ?

நானும் மகாவம்சம் படித்திருக்கிறேன். ஏலாரா என்று அது குறிப்பிடும், தமிழ் அரசரைப்பற்றி, இத்துணைச் சிறப்பாகக் கருதும் வாய்ப்புக்கள் அதிலே இல்லை. சோழமாதேவி, தொடர்கதையைப் படிக்கத் தொடங்கிய பிறகுதான் உண்மை புரிந்தது. மீண்டும் மகாவம்சத்தைப் படித்தேன்! இப்போது சொல்கிறேன், சோழமாதேவி—ஏ, ஒன்! அது முடிவுறும் முன்பே எனது தீர்ப்பு இது! கதையை எழுதிச் செல்லும் போக்கிலே மன நிறைவு ஏற்படுகிறது! காழ்ப்புணர்வு கொண்டவர்களது கடிதங்களை ஒதுக்கிச் செல்லக்கூடாதா?

எஸ். பாண்டியன், எம்.ஏ., தூத்துக்குடி

அப்பாடா! எனக்கு ஆதரவாகவும் ஒருவர் இருக்கிறார் என்பதிலே எனக்கு மகிழ்ச்சிதான்! வாழ்க வசந்தன்!

செ. வையாபுரி, காஞ்சிபுரம்

யார் அண்ணா அந்த வசந்தன்? 22-8-71 இதழில் பிரசுரிக்கப்பட்ட அவர் கடிதம், குப்பைக் கூடையில், அல்லவா கிடந்திருக்க வேண்டும்?

ஆர். தியாகராசன், மன்னார்குடி

எல்லாராலுமே கோபுரத்தின்மேலே ஏறிவிட முடியாது, அதைப்போல் எல்லாராலுமே சரியான கருத்தறிவித்திட முடியாது! ‚‚போர் அடிக்கிறது'' என்ற கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கன அல்ல,

டி. முத்துசாமி, மாமல்லபுரம்

சோழமாதேவி தொடர்கதை, உணர்ச்சிகரமான முறையில் இருக்கிறது. விறுவிறுப்புடன் போய்க்கொண்டிருக்கிறது கதை. கதாசிரியருக்கு என் பாராட்டுக்கள்!

பொ. வில்வேந்தன், திருத்தணி

(சுவைஞர்களது கருத்துக்கள் எப்படி இருக்கின்றன என்பதை அறியவும், அறிவிக்கவும்தானே இந்தப் பகுதி—எதற்காகக் கடிதங்களைப் புறக்கணிக்கவேண்டும்.-ஆசிரியர்)

அதனைக் கவனியாத மன்னர் சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்ததும், தேவியார் பின் தங்கி விட்டதையறிந்து, திரும்பி வந்து “தேவி, அதற்குள் வாய் பிளந்துவிடாதே! இன்னும் நிறைய காட்சிகளைக் காணவேண்டியிருக்கிறது” என்று சொல்லி, இடுப்பில் கரங்கோத்துக் கொண்டு அழைத்துச் சென்றார்.

வயது முதிர்ந்த இந்த நிலையிலும் இப்படி ஒரு பிரேமையா என்று காவலன் ஒருவன் எண்ணிக் கொண்டான். மன்னருக்கு முன்னே சென்றவன், தீவர்த்தியினை சுவற்றின் ஓரமாகக் கொண்டு சென்று ஐயா! இந்தச் சித்திரத்தைப் பார்த்தீர்களா? இது தான் புத்தபிரான் ஞான தீட்சைபெறும் முன்பு, அவர் மனைவியுடன் சயனித்திருக்கும் காட்சி” என்று கூறி விளக்கம் தர முனைந்தான்!

இருவரும், அவன் காட்டிய சித்திரத்தின் அருகே நின்று கூர்ந்து கவனித்தனர். பின்பு “நீ விளக்கம் எதுவும் எங்களுக்குத் தரவேண்டாம்! ஒளியை ஒழுங்காகக் காட்டி வந்தாலே போதும்” என்று கூறினார் மன்னர். விளக்கம் கொடுத்த காவலனின் முகம் சுருங்கி விட்டது. மங்கிய ஒளியிலும் அதனைக் கவனித்துவிட்ட மன்னர் “கவலைப்படபடாதே, திரும்பும்போது உனக்குச் சேரவேண்டிய வெகுமதியைத் தந்துவிடுகிறேன்!” என்றார். கூம்பிய முகம், மீண்டும் மலர்ந்தது.

திரும்பும் திசையெல்லாம் சித்திரங்கள் கண்ணைப் பறித்தன! தீட்டப்பட்டிருந்த சித்திரங்கள் யாவும் புத்தபிரானது வாழ்க்கைஅம்சங்களையும், அவர் பட்ட வேதனைகளையும் எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

கொஞ்ச தூரம் வந்துவிட்ட மன்னர், திகைத்து நின்றார்! சூரியஒளி ஒரு திசையிலிருந்து வந்துகொண்டிருந்ததைக் கண்டு திகைத்தார்! குகையின் மேல் பாகம் எங்காவது பிளவுண்டு போயிருக்கிறதோ என்று எண்ணியதும், முன்னே அடியெடுத்து வைத்த தேவியின் கரத்தைப் பற்றி இழுத்து நிறுத்திக் கொண்டு, “இரு தேவி!” என்று கூறிவிட்டு, ஒளிவந்த திசையில் கூர்ந்து கவனித்தார். ஒரு வகையான அச்சம் படர்ந்தாலும், அதனைப் பொருட்படுத்தாது, அருகே சென்று கவனித்தார். மன்னரின் வியப்புக்கு எல்லை இல்லாது போயிற்று! தேவியின்பக்கம் திரும்பி, “பார்த்தாயா தேவி! நம் நாட்டுக் கலைஞர்களின் கலைச் சிறப்பை! வெளியேயிருந்து சூரிய ஒளி உள்ளே வரும்படி அவர்களின் அமைப்பு உண்டாக்கி இருக்கிறார்கள்! நான் ஏமாந்துவிட்டேன் தேவி! சுவர்தான் பிளந்திருக்கிறதோ என்று!” எனக் கூறி மேலும் தொடர்ந்தார்.

அதனைக் கடந்து கொஞ்ச தூரம் போனதும் இன்னொரு வியப்பு ஏற்பட்டது. உஷ்ணக் காற்று மெல்ல குகையின் உள்ளே வீசியது. நிச்சயம் அது வெளியிலிருந்துதான் வரவேண்டும் என்று அனுமானித்துக் கொண்டு, அதுபற்றியும் ஆராய்ந்து அதுவும் சுவர் அமைப்பின் விசித்திரம்தான் என்று கண்டு மகிழ்ந்து, தேவிக்கும் அதுபற்றி விளக்கினார்.

மன்னர் அவர்கள் இதுபோன்ற விளக்கங்களை தேவியாருக்கு அளித்துக்கொண்டு வந்த முறைகளிலிருந்து, தீவர்த்தி ஏந்தி வந்த இருவருக்குமே, அவர்களைப்பற்றி ஐயம் பற்றிக்கொண்டது! இவர்கள் யாராக இருக்கக்கூடும்? என்று ஒரே நேரத்தில் இருவருமே எண்ணத் தொடங்கினார்கள்.

எள்ளாளச் சோழப் பேரரசர் அந்த இடத்தை

யும் கடந்து சிறிது தூரம் நடந்து சென்றபோது, கால்கள் அடி பெயரமாட்டாது அப்படியே நின்று விட்டன!

ஒரே திசையயை நோக்கிச் சென்றுகொண் டிருந்த குகை, இடது புறம் ஒன்று, வலது புறம் ஒன்று, எதிர்ப் புறம் ஒன்று என்று மூன்ருகப் பிள வுண்டு இருப்பதைக் கண்டு திகைத்தார்!

திகைத்தார் என்ருல் — வியப்பின் திகைப்பு — களிப்பின் திகைப்பு என்றுதான் சொல்லவேண்டும்!

நேர்ப் பாதையைவிட்டு, முதலில் இடது பக்கம் இருந்த உட்குகையின் பக்கம் அடியெடுத்து வைத்து, காவலர்களுக்குக் கண் சைகை காட்டிவிட்டு நடக்கத் தொடங்கிஞர் மன்னர்!

அதன் வழியாகச் சிறிதுதூரம் நடக்கத்தொடங் கிய பின்னர் தேவியிடம் "ஏன் தேவி! இந்த பிரிவின் அகலம் சுமார் அறுபது அல்லது எழுபது அடிகள் இருக்குமில்லையா" என்ருர்.

"இருக்கக்கூடும் பிரபு!" என்ற தேவியின் பதிலைத் தொடர்ந்து, முன்னே சென்ற காவலன், "இது இப் படியே இருநூறு அடி நீளம் வரையில் போய்க் கொண்டிருக்கும் ஐயா!" என்ருன்! "அப்படியா!" என்று மன்னரும் தேவியும் ஒரே சமயத்தில் சொன் னதைக் கேட்டு, விசித்திரமான ஒரு தகவலைத் தான் தந்துவிட்டதாக மகிழ்ந்து போஞன் காவலன்.

"சரி துரும்புவோம் தேவி!" என்று கூறி திரும்பி, உட்குகையின் முகப்புக்கு வந்து எதிரே வலது புறம் சென்ற வழியில் நுழைந்தார். அதன் வழியைக் கடந்து கொஞ்ச தூரம் சென்றதும், முன் போலவே சூரிய ஒளியும், அதனைத் தாண்டி, உஷ்ணக் காற்றும் வந்து கொண்டிருந்தது.

அரசரும், அரசியாரும் அந்த இடத்தைத் தாண் டியபோது, உடன் வந்த காவலன் கையிலிருந்த தீவர்த்தி அணைந்துவிட்டது, காற்றுப்பட்டு!

மிகுந்த ஆச்சரியத்தோடு அதனைக் கவனித்த மன்னர், "பேராச்சரியம் தேவி! இந்த இருள் மலிந்த குகைக்குள் தீப்பந்தம் அணையும் அளவுக்குக் காற்று வரும்படிச் செய்திருப்பது" என்ருர்.

இன்னெரு காவலனை எச்சரிக்கையுடன் ஒளிக் கோலை எடுத்து வருமாறு பணித்தார்.

மன்னரின் உத்திரவு அது என்பதை அவன் அறியாது போஞலும், அந்த நேரத்தில் ஒளியைக் காக்கவேண்டியது தனது பொறுப்பு என்பதை உணர்ந்து, மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு, அந்த இடத்தைக் கடந்தான் மற்றவன்.

நல்லவேளை! ஒளி அணையாமல் காக்கப்பட்டு விட்டது. அதன் துணையால் இன்னெரு தீவர்த்தி யும் கொளுத்தப்பட்ட பின்னர், அந்த பகுதியைக் கடந்தார்கள் இருவரும்.

வியப்புக்குமேல் வியப்பு! திகைப்புக்கு மேல் திகைப்பு என்றுதான் கூறவேண்டும். தாங்கள் முன்பு நுழைந்த பகுதியில் எப்படி உட்குகைகள் பிரிக்கப்பட்டனவோ அப்படியே இங்கும் இடதுபுறம் ஒன்றும், வலதுபுறம் ஒன்றும் உட்பிரிவு ஒன்று தென்பட்டது.

"அடேயப்பா! குகையைக் குடைந்தெடுத்த சிற்பி, அற்புதமான அறிவாற்றல் படைத்தவன்; வையகத்தையே பரிசாகத் தரலாம் தேவி!" என்று மன்னர் வாய்விட்டுச் சொன்ஞர்! தேவி, அவர்




சொல்வதையா செவிகொடுத்துக் கேட்டுக்கொண் டிருந்தார்! இல்லையே! அவரது கண்கள் சுவர்களை யெல்லாம் நிரப்பிக்கொண்டிருந்த ஓவியக் காட்சிகளை யல்லவா கவ்விக்கொண்டிருந்தன! ஆங்காங்கே படுத்தகோலத்தில், கண்களை மூடிக்கொண்டு அமைதியே வடிவாகக் காட்சிதந்து கொண்டிருந் புத்த பகவானுடைய திருவுருவங்களையெல்லாம விழுங்கிக்கொண்டல்லவா இருந்தன!

அடிக்கடி சோழ தேவியை, இந்த உலகத்துக்கு கொண்டுவந்து சேர்ப்பிக்க வேண்டியிருந்தது மன்ன ருக்கு! இப்போதும் ஓவியமொன்றின்மீது மனப் பதித்து நின்றிருந்த தேவியை அணுகி அழைத்துக் கொண்டு, புதிய உட்பிரிவொன்றின் முகப்புக்குவந்து நின்ருர்கள்!

தீவர்த்தி ஏந்தி வந்தவர்களுக்கு அன்றைய அனுபவம் புதியதாக இருந்தது! இதுவரையில் எத்தனையோ பேர் அந்தக் குகையினைப் பார்க்க வந்திருக்கிருர்கள்! இப்போது வந்திருப்பவர்களைப் போல், பார்க்கவேண்டிய இடங்களை அவர்களே நிர்ணயித்துக் கொண்டதில்லை. வழிகாட்டிக்கொண்டு வரும் தாங்கள், எந்தெந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுகிருர்களோ அவைகளை மட்டுமே கண்டுகளித்து, கைநிறைய வெண்பொற் காசுகளையும் கொடுத்துவிட்டுப் போயிருக்கிருர்களே ஒழிய, வந்தவர்கள் செல்லும் வழியில் தாங்கள் தொடர்ந்து சென்று வழிகாட்டியதில்லை. எனவே, அது அவர் களுக்குச் சங்கடமாகவும் இருந்தது. அவர்களது நிலையையும், பேச்சின் முறையையும் பார்க்கும்போது

(11-ம் பக்கம் பார்க்க.)

டகு கவிழ்ந்து நான்கு பேர்
சாவு' — செய்தித் தாளைப்
த்தபோது கண்ணில் பட்ட
ாட்டை எழுத்துக்களில் மனம்
த்தது.

சென்ற வாரம்—

ஃபைல்கள் எல்லாம் தாறு
று" இருக்கே-ஆபீசுக்கு வர்றது
லை செய்யறதுக்குத்தான் மிஸ்
! அரட்டை அடிக்கறதுக்கும்,
த பேசறதுக்கும், வேளை தவறு
பியூனை அனுப்பிக் காபி வாங்
டு வந்து குடிக்கறதுக்குமில்லை,
ரியுதா?......"

—என்று மானேஜர் நான் ஒரு
ி நேரத்துக்கு ஒரு தடவை
பி வரவழைத்துக் குடிப்பதைக்
டல் செய்து, வேலையில் கவன
லாமையை சுட்டிக் காட்டிய
து, 'ஜி' கிளார்க் பாமா குபீ
ன்று சிரித்தாள். பற்கள் பளீ
ன்று 'கோலினுஸ்' விளம்பரக்
ியை நினைவூட்டின, எனக்கு
ந்திரம் குமுறியது. வேறு சமய
க இருந்தால் அந்த அழகுப்
வரிசையை-அந்தக் கவீரென்ற
கப்பை — நளின பாவனையை
ன் கவிதை பாடி ரசித்திருப்
ன்.

ற்றிலும் பார்க்கிறபோது, அக்
ளண்டன்ட் ராமமூர்த்தி, 'பி'
ார்க் ஷண்முகம், டைப்பிஸ்ட்
திரா, 'டெஸ்பாட்ச்' பேகம்,
கிளார்க் பாலு, பியூன்கள்கூட
ல்லோரும் சிரிக்கிறார்கள். என்
் பார்த்து! மேலே மின்விசிறி
பரவென்று சுழல்கிறது. மேனே
ன் ரூல் தடியைக் கையில் எடுக்
றன். மேனேஜர் — நான்...எதி
திரே, மற்றவர்கள் அவரவர்
க்கையில். என் கையில் இருக்
உருண்ட — நீண்ட தடியை
ய் மானேஜா!" என்று பற்க
் கடித்துக் கூவி வேகமாக
ரே வீசி, ஆபீசே அதிர்ந்து
று, "என்ன காரியம் செய்து
டாய்?" என்று சிலர் பதறி
வந்து மானேஜர் நெற்றியின்
தத்தைத் துடைக்கும்போது...
ாஹ்ற...ஹ......ஹா!" என்று
ன் ஓங்காரமாகச் சத்தமிட்டுச்
க்க வேண்டும். சிரிப்பு...சிரிப்பு
ஹ...ஹ்ற...ஹா!"

நினைப்பை - மனத்தின் ஆசை
ச் செயல்படுத்த அந்த நேரத்
துணிவு இல்லை. எல்லோரும்
க்க, நான் தலைகுனிந்து என்னு
டய மேசைக்குப் போனேன்.
வாரமாக இதே சிந்தனை.
க்குப் பழி. மானேஜரின் வழுக்

## சிறுகதை!

கைத் தலை, 'ஜி' செக்ஷன் பாமா வுடைய வட்ட முகம்—கோலினுஸ் பற்கள், மற்றவர்களுடைய இத்தியாதி அங்கங்கள் — அடையாளங்கள்...ஓ! எல்லாமே இந்த உலகத்தை விட்டுத் தொலைய வேண்டும்...என்ன செய்யலாம்?

'படகு கவிழ்ந்து நான்கு பேர் சாவு'—கொட்டை எழுத்துக்கள் கண்ணில் பூதாகரமாக வடிவெடுக்கின்றன. படகு கவிழ்ந்து...

ஃ ஃ ஃ

ஆபீஸ் அமர்க்களப்பட்டது.

புது கிளார்க் ஒருவரின் வருகை. அவர் தலையில் கைவைத்து வெங்கடேஸ்வரா ஓட்டல் ஸ்வீட்டும்; சூடான வடையும், ஸ்பெஷல் காபியும்...

குதூகலத்தின் நடுவே நான் என் யோசனையை மெல்ல அவிழ்த்து விட்டேன்.

"ஓ எஸ், நல்ல யோசனை!" என்றார் மானேஜர்.

"பிக்னிக்"கா? ஐ யாம் ரெடி!" என்று குதித்துக்கொண்டு முன்னே வந்தாள் பாமா-என் எதிரி பாமா.

"மூன்று கேமராக்கள், இரண்டு டிரான்சிஸ்டர்கள், எலுமிச்சம், தயிர், தேங்காய் சாத வகையறுக்கள், ஊறுகாய்—வடை, ஸ்வீட்ஸ்-மற்றும் பல அபிப்பிராயங்கள் அங்கே உதிர்ந்தன.

"பிக்னிக் ஸ்பாட் எதுவென்றே சொல்லாமல், சாப்பாட்டைப் பற்றி என்ன சார்?" என்று குலுங்கினாள் பாமா.

நான் என் தலையை நீட்டினேன். "பிச்சாவரம்"

"சிதம்பரத்திலிருந்து நான்கு மைலில் இருக்கிறதாமே, கிள்ளைக்குப் பக்கத்தில், பெரிய காடு என்று சொல்கிறார்களே!"

# பிக்னிக்

— ஜே. வி. நாதன் —

"எஸ்..." என்று தலையாட்டினேன். "அடர்த்தியான — பரந்த காடு சார் அது. அதன் நடுவே பல கால்வாய்கள். கடலை நெருங்க நெருங்க காதைக் கிழிக்கும் ஓலம். படகில் ஐந்தாறு மணிநேரம் இன்பமாகப் பவனி, காட்டில் இறங்கி சிறிது தூரம் நடந்து ஆளரவமே யில்லாத இயற்கையான கடலின் அழகை ரசிக்கலாம் சார், அங்கேயே கொண்டுபோன சாப்பாட்டை முடித்துக் கொண்டு திரும்பவும் படகில் ஏறி கிள்ளைக்கு வரலாம்..."

"கிள்ளையில் ஏதோ சிறு கப்பல் தரை தட்டிக் கிடக்கிறதாமே மிஸ்டர் நாதன்?"

"ஆமாம் சார், ஒரு மிலிட்டரிக் கப்பல், அதைப் பார்க்க அனுமதி கிடைத்தால் அதில் ஏறியே பார்த்து ரசிப்போம்,..."

"ஓ. கே! வருகிற ஞாயிற்றுக் கிழமையே பிக்னிக்கை ஜாம் ஜாமென்று நடத்தி விடுவோம், என்ன?..."

"ஓ...எஸ்!"—கோரஸ்.

"கோரஸ் பாடுகிறீர்களா?... பாடுங்கள், பாடுங்கள். பிச்சாவரம் படகுப் பவனியில் பாதியிலேயே உங்களுக்கு ஜல சமாதி நடத்திப் பார்த்துவிடுகிறேன். டேய் பாமா! உன் கட்டழகு மேனி — ஆயிரக் கணக்கானவரின் இதயத்தைக் குலுங்க வைத்த உன் அழகுப் பற்கள்; மேனேஜர்! உன் வழுக்கைத் தலை—கத்தல்-அதிகாரம்—; டைப்பிஸ்ட்! உன் ஆணவம்...எல்லோருடைய—எல்லாமும் தொலைந்து போக நான் வழி காட்டுகிறேன். ஆழமான நீர்ப் பரப்பில் நீங்கள் அழிந்து போவீர்கள்......

எனக்கு, 'காபரே' நடனத்தில் ஒவ்வொரு அங்கத்தையும் குலுக்கி, நெளித்து ஆடுபவள் ஞாபகத்துக்கு வருகிறாள். வெற்றி விழாக் கொண்டாடும் போது ஒரு மேல்நாட்டு வகை ஓட்டலில் 'டிப்ளமேட்' விஸ்கியை ருசி பார்த்துக் கொண்டு, பக்கத்தில் ஒரு இளம் பருவ மங்கையின் இடையைக் கையால் வளைத்துக் கொண்டு, 'காபரே' நடனத்தையும் ரசிக்கவேண்டும். என் எதிரிகளைத் தொலைத்த நிம்மதியில்—ஆனந்தத்தில் நான் மூழ்கித் திளைக்க வேண்டும்...

இன்னும் மூன்று நாட்கள்! நத்தை போலப் பொழுது ஏன் இப்படி மந்தமாக அடியெடுத்து வைக்கின்றது...சே!... ஒரே போர்!

ஞாயிற்றுக்கிழமைவிடியற்காலை.

மேனேஜர் டெர்லின் பேண்ட், பேண்ட், டெரிகாட்டன் சிலாக்—பாமா சல்வார் கம்மீஸ்—பஞ்சாபி டிரஸ்சில், தான் 'மிஸ் இந்தியா' ஆகிவிட்டது போன்றமதர்ப்போடு—உல்லாசமாக உலவிக் கொண்டிருந்தாள். விலையுயர்ந்த காமிராவைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு குப் குப்பென்று புகை விட்டபடி பால தண்டாயுதம்...... டிரான்சிஸ்டரில் சுப்ரபாதம் வைத்துக்கொண்டிருந்த டைப்பிஸ்ட் சந்திரா......

பஸ் சிதம்பரத்தை நோக்கி ஓடியது. ஒரே அரட்டை. சிதம்பரத்திலிருந்து கிள்ளை. பின் பிச்சாவரம். இளங்காலைப் பொழுது. ஒன்பது மணி. பரந்த நீரோட்டம். டிரான்சிஸ்டரில் சிலோனைத் திருப்பி பாமா ரசித்துக் கொண்டிருந்தாள்.

பெரிய படகு ஒன்றில் நாங்கள் பத்துப் பேரும் ஏறிக் கொண்டோம். இரண்டு படகுக்காரர்கள் துடுப்புப் போட்டனர்.

சில்லென்ற காற்று—இரண்டு புறமும் பச்சைப் பசேலென்ற அடர்த்தியான மரங்கள். கடற் பிரதேசங்களில் மட்டுமே வளரக் கூடிய விசித்திரமான மர வகைகள். காட்டுக் கொடிகள். இடையே வண்ண வண்ண—இதுவரை எங்களில் யாருமே பார்த்திராத பறவைகள். கீச்கீச்சென்ற மெல்லொலிகள். அமைதியான நீரோட்டம்.

சற்றுத் தொலைவில் கடல் இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக 'ஓ'வென்ற இரைச்சல்...

படகு ஓட்டுபவர்களில் ஒருவன் ஏதேதோ சொல்லிக்கொண்டு வந்தான்.

"இங்கேதானுங்க ஜனாதிபதி ஜாகீர் உசேன் ஐயாவும் அண்ணாவும் வந்து நின்னு ரசிச்சாங்க, அதோ அந்த மேடு, பிச்சாவரம் ஜமீன்தாரின் மாளிகை இருந்த இடமுங்க..."

அவன் சொல்வதை வாயை பிளந்துகொண்டு கேட்டுக்கொண் டிருந்தார்கள். படகில் இருந் அனைவரும்—அதாவது என்னை தவிர. இதைவிட நல்ல சந்தர்ப்ப வேறு என்ன கிடைக்க போகிறது?

படகில் ஏறும்போதே படகு காரன் சொல்லியிருந்தான். "எதி எதிராக இரண்டிரண்டு பேர்களா உக்காருங்க சாமி. யாரும் எழுந் நிற்கப்படாது. பாரம் ஒரு பக்கம அழுந்தினா படகு சாஞ்சுடும் அப்புறம் என் மேலே குற்ற சொல்லப்படாது..."

மேனேஜர் பாமாவின் பக்க திரும்பி ஏதோ 'விட்' அடித்தார் "ஓஹோ...ஹோ!" எல்லோரு சிரிக்கிறீர்களா, சிரியுங்கள் சிரியு கள்—இதுதானே உங்கள் கடைசி சிரிப்பு..."

என் மனதில் ஒரு ஆவேசம் குபீரென்று எழுந்து நின்றேன் படகு இப்படியும் அப்படியும்

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை எதிர்த்துத் தங்களால் ஒரு வார்த்தை சொல்ல முடியும் என்ற நம்பிக்கையும் பிறக்கவில்லை. எனவே குழம்பிய உள்ளத்தோடு அவர்கள் மன்னரைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தனர்.

புதிய பிரிவின் வாயிலில் வந்து மன்னர் நின்றதும், வழிகாட்டிவந்த காவலன் ஒருவன் துணிந்து "ஐயா! இந்தப் பாதையில் போவது ஆபத்தானது! ஆபத்து உண்டாக்கக் கூடிய வண்டுகளும், பூச்சிகளும் இங்கே நிறைந்திருக்கின்றன!" என்றான். மற்றவனும் அவனைத் தொடர்ந்து "ஆமாம் ஐயா! இதன் உள்ளே ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கின்றன!" என்றான்.

மன்னருக்கு வியப்பு ஒரு புறமும், சிரிப்பு ஒருபுறமும் ஒருசேர வந்தடைந்தது. "பூமிக்குள்ளே புதையுண்டிருக்கும் எந்தக் குகையானாலும், நண்பர்களே, அங்கே போக்குவரத்துக் குறைவுபட்டு விடும்போது, அபாயம் விளைவிக்கக்கூடிய, உயிர் ஜந்துக்கள் உண்டாவது இயல்புதானே! இங்கே, இந்தப் பகுதிக்கு நீங்கள் யாரையும் இதுவரையில் செல்ல அனுமதிக்கவில்லைபோல் தெரிகிறது. அந்த மரபை இப்போது முதல் நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும்!"—என்று சொல்லிக் கொண்டே இரண்டடி எடுத்து முன்னே வைத்தார் மன்னர்!

வழிகாட்டி வந்தோரின் நிலைமை தர்மசங்கடமானதாக இருந்தது. நிச்சயம் அவர்களை அந்தப் பகுதிக்குள் அனுமதிக்கக்கூடாது என்பதற்குப் போதிய காரணம் தீவர்த்தி ஏந்தி வந்தவர்களுக்கு இருந்தது! ஆனால் மன்னருக்கு? வண்டுகள், பூச்சிகள் என்பன ஒரு காரணமேயானாலும், அவற்றிலிருந்து தீவர்த்திகளின் உதவியால் தப்பிவிட முடியும்! எனவே, எப்படியும் உள்ளே போய்ப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்! தேவியை இறுகப் பிடித்துக் கொண்டு, முன்னால் நடக்கவும் தொடங்கிவிட்டார்!

காவலர்களால், அவர்கள் முன்னேறி நடப்பதை அனுமதிக்கவே முடியாது! அங்கே அவர்கள் சுட்டிக் காட்டும்ஆபத்து எந்த வடிவத்திலிருக்கிறது என்பதை அறிந்தவர்கள் அவர்கள். அறியாத மன்னரின் ஆர்வத்துடிப்புபற்றி அவர்கள் அலட்சியம் செய்துவிட முடியாது. எனவே, அவர்களைத் தடுத்தே தீரவேண்டு எப்படியும் தடுத்தே ஆகவேண்டும் என்பதை இருவரும் ஒரே நேரத்தில் தங்களுக்குள் ஒருவரை ஏறிட்டுப் பார்த்து, விழியால் பேசி முடிவெடுத்துக்கொண்டார்கள்.

அவ்வளவுதான்! வழிகாட்டிக் கொண்டுவந்தவர்களது கரங்களிலிருந்த தீவர்த்திகள் ஒரே நேரத்தில் எப்படித்தான் அணைந்தனவோ தெரியவில்லை! எத்தனைமுறை அப்படிப்பட்ட அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதோ யாருக்குத் தெரியும்!

இமை மூடித் திறப்பதற்குள் இருள் வந்து கவிழ்ந்து கொண்டது! 'திட்டமிட்டே அவ்வாறு ஒளிக்கோல்கள் அணைக்கப்பட்டன என்பதை வினாடியில் புரிந்து கொண்ட மன்னர், தேவியை ஒரு கரத்தால் இறுகப் பற்றிக்கொண்டார்! அடுத்த வினாடியில், அரசர்மீது அங்கிருந்தவர்களில் யாரோ ஒருவன் பாய்ந்தான்!

யார் எங்கே இருக்கிறார்கள் என்பது கூட தெரியாத இருளில், பாய்ந்தவனுடையபிடிமன்னரது கழுத்தில் இறுகியது. பிடிதளர்ந்த தேவியாரின் 'ஐயோ!' என்ற அவலக் குரல் குகையெங்கும் பரவி—எதிரொலித்து அச்சுறுத்தியது.



...ஆடியது. "உட்கார்...உட்கார்..." என்று ஆளுக்கு ஆள் சத்தம் போட்டார்கள். சிரித்தேன். பயங்கரமாகச் சிரித்தேன். படகின் ஒரு பக்கமாகச் சாய்ந்து என் முழுப் பலத்தையும் பிரயோகித்தேன்.

வெற்றி! வெற்றி! "ஐயோ... ஐயோ!" என்ற குரல்கள்—ஓலம்.

சில்லென்ற தண்ணீரில் விழும் போது என் மனம்தான் எத்தனை அமைதியாக...ஓ. இது என்ன— நான்...நான்...

ஐயோ!......பழிவாங்கும் தீவிர வெறியுணர்ச்சியில் எனக்கு நீச்சலே தெரியாது என்பதை எப்படி மறந்து போனேன்... ஐயோ...கடவுளே...!"

ஃ ஃ ஃ

பொழுது விடிந்தது.

என் மனைவி காப்பித் தம்ளருடனும் மாத்திரையுடனும் எதிரே நின்றாள். "இப்போ எப்படிங்க இருக்கு...?" கவலையுடன் கேட்டாள்.

மூளையைக் கசக்கிக் கொள்கிறேன். ஒவ்வொன்றாக...மனதின் அடியாழத்திலிருந்து நினைவுக்கு வருகின்றன.

பழிவாங்க நினைத்து படகைக் கவிழ்த்தது, நீச்சல் தெரியாமல் நானே மூழ்கியது......அப்புறம், அப்புறம்......மங்கலாக ஞாபகம் இருந்த அந்தச் சில சம்பவங்கள்— மானேஜர் என் தலைமயிரைப் பலமாகப் பிடித்துக்கொண்டு நீந்தியது, கரையோரமாக பாதி நினைவிழந்துபோன நிலையில் என்னைச் சேர்த்து முதலுதவிகள் அளித்தது......

நீச்சல் தெரிந்த எல்லோருமே பத்திரமாகத் தப்பிவிட்டிருந்தார்கள். அவர்களை அழிக்க எண்ணிய எனக்குத்தான் அழிவு வரவிருந்தது.

திண்ணையில் என் மகன் கண்ணன் பள்ளிப் பாடத்தை உரக்கப் படித்துக் கொண்டிருந்தான். "கெடுவான் கேடு நினைப்பான்."

★

தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டுமெனக் கூறும் அதே வேளையில் நாம், ஆங்கிலமும் உரிய மதிப்புடன் இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறோம்.

ஆனால், நம்மைப் பற்றிய எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டு, நாம் தமிழைத் திணிக்கிறோம் என்பதாகும்! இவர்கள் இதே விஷயமாக அன்று நம்மை என்ன சொன்னார்கள் என்ற வினாவிற்கு விடைதரும் முறையிலேயே இருக்கிறது.

இது எப்படி ஒரு பொய்க் குற்றச் சாட்டு என்பதை மெய்ப்பிக்கிறது, 18—2—'51-இல் எழுதப்பட்ட இக் கட்டுரை! அது மட்டுமல்ல—நாம் ஆங்கிலத்துக்கு அன்றும், இன்றும், என்றும் எதிரிகள் அல்லர் என்பதை யும் எடுத்துக் காட்டுகிறது இது!

# துடைத்துக் கொள்க

**அண்ணாதுரை**

"இதுகளுக்கு" ஆங்கில மோகம் அமோகம்!

ஆங்கிலம், வெளிநாட்டான் மொழி, அந்த ஆங்கிலத்துக்கு "இதுகள்" அடிமைகள்!!

"இதுகளா, கன்னித் தமிழைக் காப்பாற்றப் போகின்றன! காங்கிரசாராகிய நாங்கள் இந்த ஆங்கில மோகம் கொண்ட அடிமைகள் அல்ல!"

ஆங்கிலத்தை அடியோடு விரட்டி அடிப்போம்.

'இதுகள்' வெட்கமின்றிக் கூறுகின்றன, ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டுமென்று. என்னே, 'இதுகளின்,' அடிமை மனப்பான்மை. தமிழ் வளர்க்கும் பண்பா இது, இதுகளா தமிழை வளர்க்கும் கூட்டம்!

ஐயகோ! ஐயகோ! அம்மவோ! அம்மவோ!—

இதுபோல, முழக்கமிடுந் தேசியத் தமிழர் சிலர் உண்டு—அறிந்திருப்பீர்கள்.

உலகிலே ஆங்கிலம் அடைந்துள்ள உயர் நிலையைக் கண்டு, அந்த மொழி மூலம் பெறக்கூடிய பலன்களை எண்ணி,ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்று நாம் கூறுவது கேட்டு, 'இதுகள் அடிமைகள்' என்று வசை பாடுகின்றனர்.

"சர்வதேச பாஷையான ஆங்கிலப் படிப்பை இந்தியா விட்டுவிட முடியாது. ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் ஆங்கிலம் கட்டாய பாஷையாக்கப்படவேண்டும்"

கேண்மினோ! கேண்மினோ! கேடுகளைந்து, கன்னித் தமிழை வளர்க்கக் கங்கணம் கட்டிக்கொண்டுள்ள கர்ம வீரர்காள்! நீவிர் நிமிர்ந்து நடந்துகொண்டிருக்கும் இந்நாளிலே நாடே உமது ஆள் காட்டி விரல் கண்டு ஆடிடும் இவ்வேளையிலே, ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டும், கட்டாய பாஷையாகவும் போதிக்கப்படவேண்டும். அதிலேயும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் போதிக்கப்பட வேண்டும், ஆரம்பத்திலிருந்தே கட்டாய பாஷையாகப் போதிக்கப் படவேண்டும் என்று துணிவுடன் கூறுவதைக்கேண்மின்! எவ்வளவு நெஞ்சழுத்தம்! எத்துணை அடிமைப் புத்தி! எங்ஙனம் இதனை விட்டு வைப்பது! எடுங்கள் ஏசல் பாணத்தை! தொடுத்திடுங்கள் போர்! தமிழ் வளர்க்கும் வீரர்காள்! ஆங்கில மோகம் கொண்டலைவோரை வீழ்த்தாது விடுவது அழகாகுமோ, அறமாமோ, தமிழைப் போற்றுதும், தமிழைப் போற்றுதும்! — என்று பாடிக் கூடுக! பாவியைத்தொலைத்திட முன் வருக! இன்றே வருக! திரண்டு வருக!!"—என்று கூறிடத் தோன்றும், நம்மை 'இதுகள்' என்று ஏசிடும் தலைவர் வழிநிற்கும் தொண்டர் குழாத்துக்கு.

உண்மையாகவே,ஆங்கிலமொழியின் பயனைக் கருதி அம் மொழியைப் பயல வேண்டும் என்று கூறிடும் நம்மை, 'அதுகள்—இதுகள்' என்றுஆத்திரத்துடன் ஏசிடுவோர், ஆங்கில மொழியைப் படித்தாக வேண்டும், அனைவரும், கட்டாயமாக, துவக்கத்திலிருந்தே என்று பேசிடுவோரைச் சாடாது விட

(15-ஆம் பக்கம் பார்க்க)

# புராணம் பேசப் புலமை வேண்டுமா?

சீனநாட்டுச் சர்க்கார் சீறினர் ஒரு காலத்தில், தமிழகத்துக்குத் தங்கள் நாட்டுச் செல்வம் போய்விடுகிறதே என்று. தமிழ் நாட்டவர், கடலில் கலம் செலுத்தி வாணிபம் நடத்திப் பெரும் பொருள் ஈட்டினர். அந்த வாணிபத் துறையினுல், சீன நாட்டுச் செல்வம் குறைந்து விடுவதாகக் கருதி, அந்நாட்டுச் சர்க்கார், தமது நாட்டவருக்குத் தடை விதித்தனர், தமிழகத்தோடு வாணிபம் செய்வதை நிறுத்த. மேனுடுகள் எங்கும் சென்ற தமிழர், அகிலையும் சந்தனத்தையும், முத்துப் பவளத்தையும், ஆடை வகைகளையும் விற்றனர், தமிழகத்திலேகொண்டு வந்து பொருளைக் குவித்தனர். குவித்தனர்! வாழ்ந்தனரோ? இல்லை! மன்னர்கள், செல்வத்தில் புரண்டனர், மதக் குருமாராக ஆரியர் அமர்ந்தனர், ஆரிய மார்க்கத்தைப் புராணங்கள் புகுத்திவிட்டன, அரசனும் மக்களும் வாரி வாரி இறைத்தனர் பொன்னையும் மணியையும். குன்றெல்லாம் கோயில், மலைகளெல்லாம் குடையப்பட்டன, எங்கும் ஆலயம், ஆலயமெங்கணும் விலையுயர்ந்த நகைகள், விமரிசைமான திருவிழாக்கள், இதன் பயனுக விளைந்தது என்ன? மக்கள் உழைத்து, மன்னனிடம் தர, மன்னன் மகேசனிடம் தருவதாக எண்ணிக் கொண்டு மறையோரிடம் தர, மறையோர் உண்டு கொழுத்து ஊராள்வோனையும் மிரட்டும் நிலை பெற்றனர். மன்னர்கள், வெளி நாட்டிலிருந்து வந்த, பாடுபடாத கூட்டத்தாருக்குத் தருவதாகவா எண்ணினர்? இல்லை! பக்திக்காகத் தருவதாக எண்ணினர்! தாம் செய்யும் தானதருமம், ஆலயப் பணி யாவும்பிரமாதமில்லை, இவை எம்மாத்திரம், இல்லையே என்னுதை இயற்பகை என்ன, விளையா விதையை எடுத்தளித்த இளையான் குடி மாறனென்ன, கண்ணையே அப்பிய வேடர் குலத்தவனென்ன, தனத்தையும் தன்னையுமே அளித்த அமர்நீதி என்ன, இவர் போன்ருர் பக்தியின் பொருட்டுச் செய்ததிலே

## அறிஞர் அண்ணா

பாவியேன் யான் பத்தாயிரத்தில் ஓர் பங்கும் செய்தேனில்லை, பரமனே, என்று எண்ணினர்-எண்ண வைத்தது பெரிய புராணம்.

பெரிய புராண காலத்துக்குப் பிறகு, 11, 12-வது நூற்றுண்டுகளிலும் அதற்குப் பிறகும், செல்வம் சீரழிந்தது, பாடுபடுவோர் பட்டினி கிடந்தனர், பாடுபடாத பார்ப்பன குலம், நாடு ஆண்ட



வரை மிரட்டி நல்வாழ்வு வாழ்ந்தது. செல்வம் இருந்தும் சீரழிக்கப்பட்டு, உழைத்தும் பயன் காணுது குமுறும் மக்கள், வெளிநாடுகளிலே புரட்சி செய்திருப்பர் — இங்கோ, 'புண்ய' கைங்கரியம் செய்கிருன் பூபதி, இதைக் குறை கூறுவதே பாபம், என்று மக்கள் வாயடக்கி வாழ்ந்தனர், இதற்குப் பெரிய புராணம் மிக மிகப் பயன்பட்டது —மன்னரை மாற்ருன்முன் மண்டிபிடச் செய்ய—மக்களை மதியிழக்கச் செய்ய! யாரார், ஆரியர் வாழ்வுக்கேற்ற விதமான ஆட்சி நடத்தினரோ அவரெல்லாம் புகழப்பட்டனர் — 'இம் மன்னன் மனு தர்மத்தை அனுஷ்டிக்கிருன்' என்று, வீரராஜேந்திரனை விப்பிரர் புகழ்ந்தனர் என்று செப்பேட்டில் செதுக்கப்பட்டிருக்கிறது. காணும் கல்வெட்டுகள், எதைக் காட்டுகின்றன, நமது காவலர்கள், மக்கள் உழைத்துத் தேடிய பொருளை எல்லாம், ஆரியருக்குக் காணிக்கையாகத் தந்த, கண்மூடிச் செயலைத் தான். கோயில் அமைப்பதும், அங்கு கொட்டு முழக்கும் கூத்தாடுவோரும், குழலூதியும் அமைப்பது, திருப்பணி என்று பெரிய புராணம் தெரிவித்தது — அத்தகைய செயல் புரிந்தோர், பரமனின் அருள் பெற்றனர் என்று பாடல்கள் பாடப்பட்டன. எனவே மன்னர்கள். "கட்டு கோயிலை! வெட்டு திருக்குளம்! கொடு காணிக்கை! தான தருமங்களைத் தயங்காமல் செய்! சதுர்வேதி மங்கலங்களை ஏற்படுத்து" என்று உத்தரவிட்டனர். ஊரெங்கும் கோயில்! கோயிலெல்லாம், அந்தக் கும்பல்!! தாளச் சத்தம், மேளச் சத்தம்' மக்களின் பட்டினிக் குரலை மன்னர் காதில் விழவொட்டவில்லை.

போர் முறையிலே புல்லர் கையாளும் திட்டம் ஒன்றுண்டு, அதாவது எதிரி உபயோகிக்கும் நீர் நிலையங்களிலே நஞ்சு கலந்து விடுவர், அங்கு நீர் பருகி எதிரி மாள்வர்; அதுபோல, பெரியபுராணம் முதலிய ஏடுகள், தமிழகத்திலே தூவிய எண்ணங்கள், தமிழர் வாழ்விலே நஞ்சு புகுத்திவிட்டன; நசித்தது தமிழகம். தமிழ் நாட்டிலே "சதுர்வேதி மங்கலங்கள்" அமைத்தனரே, அதைவிட வேறு என்ன சான்று வேண்டும், தமிழரின் செல்வம் ஆரியருக்குக் கொட்டி அழப்பட்டது என்பதை விளக்க.

மன்னர்கள் 'வரி' கேட்பதிலோ, குறைவு கிடையாது. கடமை, குடிமை என்று இருவகை வரி; கடமை அரச காரியத்துச் செலவுக்ாக, அஃதே அனைவரும் புகழும் ஆறிலொரு கடமை என்பது. குடிமை என்பது பலர் தெரிந்து கொள்ளாதது; அது ஆலய காரியத்துக்கும் ஆரிய சேவைக்குமான செலவுக்கென்று மன்னர் திரட்டியது. நிலத்துடன் நின்றுவிடவில்லை வரி; தொழிலுக்கு உண்டு; பொருளுக்கு உண்டு-சுங்கவரி இருந்தது.

ஏரி மீன் காசு—மீன் பிடிப்போர்

இடைப் பட்டம்—ஆடு மேய்ப்போருக்கு.

இடங்கை வரி-இடங்கை தொழிலாளருக்கு.

கடை வரி—வியாபாரிக்கு.

குசக்காணம்—குயவருக்கு.

ஓடைக்குழி — ஓடம் விடுவோருக்கு.

செக்குக் கடமை-வாணியருக்கு.

வண்ணார்பறை — வண்ணருக்கு.

விற்பிடி—வேடருக்கு.

என்ற முறையிலே தொழில் வரிகள்வசூலிக்கப்பட்டன. இரும்புகள், உப்பு, ஆகியவற்றுக்கு வரி, பொருளை ஏற்றுமதி செய்தால் வரி, இறக்குமதிக்கு வரி, ஸ்தல தாயம், மார்க்கதாயம், மாமூல தாயம் என்ற வரி வகைகள். இவ்வளவு வரியும் கிடைத்தபோது வாட்டமேது மன்னனுக்கு! வாணிபர்கள் ஈட்டிய பொருளைக் குவித்த பிறகு, வறுமை ஏது நாட்டிலே! ஆனால் வளமான இந்நாட்டிலே சலியாத உழைப்பால் மக்கள் சேகரித்த செல்வமெல்லாம், எப்படிப் பாழாயின என்பதைச் செப்பேடுகளும், சிலாசாசனங்களும், கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

பெரியபுராணம், பரவிய நாட்டிலே, சிவனருளும் சேர்ந்து பரவிற்ரு? பஞ்சம் பரவிற்று! ஏன் பரவாது? கிடைக்கும் பொருளெல்லாம், சதுர்வேதி மங்கலத்தாருக்குச் செலவாகிவிடவே, மக்கள் பஞ்சத்தால் வாடலாயினர். பெரிய புராணத்தைப் படித்துப் பயன் காணவில்லை! தொண்டர் பெருமையை உணர்ந்து, ஊர் சுகப்படவில்லை! தமிழகத்திலே பஞ்சம் தலைவிரித்தாடிற்று! செல்வம் கொழித்த தமிழகத்திலே, பட்டினிக் குரல்! பல, வங்கப் பஞ்சங்கள்! தங்கச் சிலைகள் கோயிலிலே! வைர முடிகள் அவை தம் சிரங்களிலே! சிங்கத்தமிழர் செத்து வீழ்ந்தனர் பாதையிலே, பஞ்சந்தால்! சாந்தத்தையும் சீலத்தையும் பக்தியையும் உண்டாக்கிய ஏடன்ரு என்று கொண்டாடுகிருர்கள் பெரிய புராணத்தை. ஆனல். அதை நாட்டிலே பரப்பி, மக்களையும் மன்னரையும் நீறுபூசிகளாக்கிய பிறகு. நாடு செழித்ததோ, வளம் வளர்ந்ததோ? இல்லை! கிடைத்ததை எல்லாம், ஆலயத் திருப்பணிக்கும், அம்மையப்பன் திருவிழாவுக்கும் செலவிட்டு, மக்கள் ஓய்ந்தனர்; பஞ்சமும் வந்துற்றது, அதுபோது சாய்ந்தனர்—சிவலோகம் சென்றனர், சோற்றுக்கில்லாதார்தொகை தொகையாக!

## பஞ்சம்

1054—ஆலங்குடி தஞ்சை மாவட்டம்

1116—1119—தக்ஷிணம்

1124—திருவத்தூர்

1160—திருக்கடையூர், தஞ்சை.

1201—திருப்பாம்பரம் ,,

1241—திருமங்கலக்குடி ,,

1241—நந்தலூர், கடப்பை.

1390-1—திருப்பனங்காடு, வடாற்காடு

1391—திருக்களார், தஞ்சை

1509—கன்கனஹல்லி, பெங்களூர்.

என்ற முறையிலே, இந்தத் தமிழகத்திலே பஞ்சம் தலைவிரித்தாடிற்று. பஞ்சாட்சரம் ஜெபித்துக்கொண்டு இருந்த மக்கள் இந்தப் பஞ்சங்களைத்தானு பரமனிடமிருந்து பரிசுகளாகப் பெற வேண்டும்! பக்திப் பிரபாவத்தின் விளைவு இதுவாகவா இருக்கவேண்டும்! சைவம் தழைத்தது. தொண்டர் பெருமையைச் சேக்கிழார் செந்தமிழில் எடுத்துக் கூறியதால் என்று பூரிப்படையும் அன்பர்கள், இத்தனை பஞ்சங்களும், 11-வது நூற்றுண்டிலே பக்திப் பரவசத்திலே பொருளைப் பாழாக்கத் தொடங்கிய தமிழகம் 11-லிருந்து 15-வது நூற்றுண்டு வரையிலே, பஞ்சத்தில் சிக்கித் தவித்ததை, திருஅருளின் மாட்சிமையிலே ஒன்ருகக் கொள்வரோ!

சேக்கிழார் குறிப்பிடும் தலங்களிலே பெரும்பகுதி தஞ்சை மாவட்டமாக இன்றுள்ள சோழ வளநாட்டிலே உள்ளன. இவரும் சோழனிடமே மந்திரி, சோழநாடு சோறுடைத்து என்பது முதுமொழி, அந்நாடு, பஞ்சத்தால் நலிவதா? பணம் குவியாமலா இருந்தது? பணம் ஏராளம்! அவை கோயில்களிலே குவிந்து கிடந்தன. பார்போசா எனும் வரலாற்று ஏட்டாசிரியர் கூறுகிருர். "மாலிக் காபூர் என்ற இஸ்லாமிய வீரன் தென்பகுதியிலே வெற்றிகள் பல பெற்றுத் திரும்பும்போது 1310-ல் 96,000 மணங்கு எடையுள்ள தங்கத்தைக் கொண்டு போனுன்" என்று. 2000 ஒட்டகங்களின்மீது ஏற்றப்பட்டனவாம் அந்தப் பெரும் பொருள்! ஆகப், பொருள் இருந்தது, அதனை 'அருள் வாங்க' அடியார்கள் காதைகளிலே கூறப்பட்ட முறைப்படி செலவிட்டனர். இலாபம், இலட்சக் கணக்கிலே மக்கள் செத்ததுதான். இத்தகைய நிலை ஏற்படக் காரணமாக இருந்தது. பக்திக்காக எதையும் செய்வதே பெருமை தொண்டர் திறம் என்று பெரியபுராணம் புரிந்த போதனைதான் என்று கூறுவது தவரு? பெரியபுராணத்திலே பக்திக்காக எதையும் செய்யும் சித்தம் படைத்தவர்களின் கதைகள் தானே உள்ளன. அந்த ஏட்டைப் புண்ய ஏடு என்றும், ஆண்டவனே அடி எடுத்துக் கொடுக்க, அருமை மந்திரியார் அழகுறப் பாடியது என்றும் கூறிவிடவே, மக்கள் அதிலே கண்ட கருத்துக்களைக் கூடுமானமட்டில், அவரவர் சக்தியானுசாரம் அனுஷ்டிக்கவேண்டும் என்று உறுதிகொண்டனர். அதன் பயனுக, ஊரிலே நாசமே வந்துற்றபோதிலும், ஈசன் சேவை செய்தால் போதும், மக்கள் மடிந்தாலும் கவலையில்லை என்று இருந்தனர். பஞ்சம் தன் பசியைத் தீர்ந்

துக்கொண்டது. ஏற்கனவே தரப்பட்டுள்ள 'போதை' போதாதென்று, என் நண்பர் புலவர் இராசமாணிக்கனுரும், அந்தத் திருப்பணியிலே ஈடுபடுகிருரே! ஆண்டவன் முதலடி எடுத்துத் தந்தார், ஆகவே இது அருள்நூல் என்று நீறு பூசும் நிகண்டுதூக்கி சொன்னுர், ஏடு பல படித்த என் நண்பர் நாடு நலிவதை மறந்து, இந்த ஏட்டிலே, கல்வெட்டும் சரித்திரமும் உண்டு, எனவே இதனைத் தள்ளலாகாது என்று கூற முன் வந்துவிட்டார். எக்காரணம் கொண்டுகூறியதாகவேனும் இருக்கட்டும், இதுபோல அவர் கூறியதால், பழைமையின் பிடியை, வர்ணுஸ்ரமத்தின் வலையை ஜாதிப் பித்தரின் நிலையை, முறையே பலமாக்குகிருர், வீசுகிருர், உயர்த்துகிருர் என்றுதானே ஏற்படும். இந்தக் காரியம் செய்ய இவ்வளவு பெரிய படிப்பு வேண்டாமே, 'அரஹர நமப்பார்வதி பதயே' என்று கூறுமளவு, குரல் வலிவு கொண்டாலே போதுமே, என்றுதான் நான் கூறுகிறேன். கோபுரமேறி கோழி மேய்ப்பானேன், குப்பை மேட்டிலேயே அந்தக் காரியத்தை எளிதாகச் செய்து விடலாமே என்று கூறுகிறேன். ஃ

---

## தொடர்ச்சிகள்

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாமோ! அந்த அடிமைப் புத்தியை மண்டையிலடித்து நொறுக்காவிட்டால், தேசிய வீரம் என்னுவது! கன்னித் தமிழைக் காப்பாற்றும் கர்மவீரர்களின் தீரம், திறம் என்னுவது! எனவே அவர்கள், கிளம்பத்தான் வேண்டும், ஆங்கில மோகத்தை அழிக்க, பிறமொழிப் பித்தத்தைப் பொசுக்க, அன்னியனின் அடிவருடும் பேதைமையை ஒழிக்க!

கிளம்பத்தான் வேண்டும்—நம்மை 'இதுகள் அதுகள்' எனக் கூறிடுவதைவிட, வன்மையாகக் கண்டிக்கத்தான் வேண்டும் —கிளம்பத்தான் வேண்டும்-கண்டிக்கத்தான் வேண்டும் — ஆனுல், கிளம்பவும் மாட்டார்கள், கண்டிக்கவும் மாட்டார்கள் — ஏனெனில், ஆங்கிலத்தை ஆரம்ப முதல் அனைவரும் கட்டாயமாகப் படித்



# காதல்!

(மாதவி மணுளன்)

★

கண்ணுேடு கண்நோக்கிக் கலந்து நெஞ்சக்
காவியத்தின் உயிர்மூச்சே காதலாகும்!
பண்ணுேடு பாட்டினையும் பாங்கில் ஆண்பெண்
பழரசமாய்க் கலந்துவிடல் காதல் ஆகும்.
விண்ணுேடு பாடிவரும் நிலவைக் கண்டால்
விழிமலர்வாள் அல்லிமகள் காத லாளே?
மண்ணுேடு மரஞ்செடிகள் பொருந்தி நின்றே
மடிமீதில் வேர்பாய்ச்சல் காதல் அன்றே?

பக்தனுக்கோ கடவுள்மேல் காதல்; நல்ல
பாணனுக்கோ கூத்தின்மேல் காதல்; என்றும்
வெட்கமிலா வீணனுக்கோ கயமைக் காதல்
வேலையில்லா வம்பருக்கோ சோம்பற் காதல்
எந்நாளும் திருடர்க்கோ இருள்மேற் காதல்
எழிற்பூவின் மேற்காதல் வண்டு கொள்ளும்
மக்களுக்கோ தாயின்மேற் காதல்; வெட்டி
மனிதற்கோ பணமேதான் காதல் என்பேன்.

சூடியநன் மலரின்மேல் நாட்டம் கொண்டே
சுகம்பெறவே ஆண்டாள்மேல் காதல் கொண்டார்;
ஆடிவிழும் வாழ்வின்மேல் வெறுப்புக் கொண்டே
ஆன்றோர்கள் சாவின்மேல் காதல் கொண்டார்;
தாடிவைத்த மாமுனிவர் துறவு பூண்டே
தனித்திருக்க விழித்திருக்க காதல் கொண்டார்;
பாடிவீட்டில் தனித்தலைவன் சேரன் தானே
பகைமுடிக்க வாளின்மேல் காதல் கொண்டான்!

கோலங்கொள் குமரிமகள் நெஞ்சம் நோக
கொதிப்பதுவே காதலெனும் கொடிய நோயாம்!
பாலம்போல் இணைந்திடவே பரந்து பாயும்
பருவத்தின் துடிப்பதுவே காதல் தானே!
காலத்தை வென்றதுவே காதல்! என்றும்
கனித்தமிழின் தங்கைதான் காதல்! நாளும்
தாளத்தோ டிணைந்தநல் ராகம் போல
தரணியிலே செழித்திருக்கும் காதற் பண்ணே!

தாகவேண்டும், என்று கூறுபவர், திராவிடர் இயக்கத்தவரல்ல — இருந்தால்தான் 'ஒருகை' பார்த்துவிடுவார்களே, ஒய்விலாது உழைத்துத் தமிழகத்தைத் திராவிடத்தாரிடமிருந்து மீட்கும் திருப்போரில் ஈடுபட்டுள்ள திருத்தொண்டர்கள்!—ஆங்கிலத்தின் அவசியத்தை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியிருப்பவர், அன்னை பாரதமாதாவின் ஆசியால், அகில இந்தியாவை ஆட்சிபுரியும் காங்கிரஸ் மந்திரிகளிலே ஒருவரான, ராஜகுமாரி அமிர்தகௌரி அம்மையாராகும்! பாடியாலாவில் ஒரு பள்ளிக்கூட விழாவிலே அம்மையார் அறைந்திருக்கிறார். இதுபோல, பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாளில்!

கோபம் கொப்பளிக்கிறது—கண் சிவக்கிறது-கன்னித் தமிழ் கடகடவெனப் புரண்டோடி வருகிறது—ஆனல் தொண்டை அளவிலே நின்றுவிடுகிறது.

கண்டிக்கலாம், காரசாரமாக—(காரசாரமாக இல்லாததால்)—அடுக்கடுக்காகச் சொற்கள் உருண்டோடி வருகின்றன—அகராதியும் பக்கத்திலேயே இருக்கிறது துணை செய்ய, சந்துமுனைச் சிந்து — வந்துதவி செய்கிறது — எல்லாம் சரி—ஆனல் கண்டிக்க முடியாதே—பேசுபவர், ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாரல்லவோ — காங்கிரசாயிற்றே — காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவராயிற்றே—அகில இந்திய அரசியலை நடத்தும் ஆற்றல் கொண்ட பாரதமணிகளில் ஒருவரான பெண்மணியல்லவா பேசுகிறார்கள், ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்கத்தான் வேண்டுமென்று-எப்படிக் கண்டிப்பது! கண்டித்தால் விபரீதமல்லவா ஏற்பட்டுவிடக் கூடும்!

'அதுகள் — இதுகள்' கூட்டத்தோடு, பாரதமணிகளில் ஒருவரான ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாரும் சேருகிறார்கள் ! சேராமலிருக்க முடியுமா! அறிவு அழைக்கிறது அம்மையாரை, ஆர்ப்பரிப்பைக் கண்டு அஞ்சிவிடுவார்களா! அவர்கள் நன்கு அறிவார்கள், இந்த ஏசல் பாடுவோர், தம்மை நெருங்க மாட்டார்கள் என்று! ஏசல் பாடிடுவோரும் நன்கு புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள், தங்கள் கோபப் பார்வையையும் கொதிப்பான பேச்சையும், அப்பக்கம் திருப்பலாகாது—என்ற உண்மையை! கோபம் கொதிக்கிறது — கொதிப்பைப் போக்கிக் கொள்ளவா வழி தெரியாது வழிகாட்டும் வல்லவர்களுக்கு! திராவிட இயக்கம் இருக்கவே இருக்கிறது, தாக்குவோம், மேலும் மேலும் தாக்குவோம், — என்று பரணி பாடினல், கொதிப்பு குறையாமலா போகும்!

அச்சுக் கோர்ப்போய்!
அச்சுக் கோர்ப்போய்!
நச்சுச் சொற்கள் நாலாயிரமும்
இச்சையுடன் தந்தேன்
இன்றே கோர்த்திடுக!

என்று பாடி தங்கள் துக்கத்தையும், கோபத்தையும், துடைத்துக் கொள்வார்களா! ஃ

---

# உரைகல்

## அலெக்சாண்டர்

(நாடகம்)
ஆசிரியர்:-
**புலவர் தாமரைக்கண்ணன்**
வெளியீடு :
அசோசியேஷன் பப்ளிஷிங் ஹவுஸ்,
மண்ணடி, சென்னை-1.
விலை ரூ. 1—50

படித்தற்கும், நடத்தற்கும் சுவை கூட்டக்கூடிய இந்த நாடகத்தின் ஓரிடத்தில், "சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவதில்தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கி உள்ளது" என்று ஆசிரியர் தெரிவிப்பதுபோல, இந்நாடகத்தை ஆக்கும் முயற்சியினை, ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு, முன்னேற்றத்துக்கான வித்தூன்றிக் கொண்டிருக்கிறார் தாமரைக்கண்ணன்.

நாடகத்தின் பல காட்சிகளிலும் அரிஸ்டாட்டிலின் அரிய பல கருத்துக்களை எடுத்துக்காட்டி இருப்பது பயனுள்ளதாகும். இதுவரையில் நாமறிந்த அலெக்சாண்டரைவிட, அவனைப்பற்றி இன்னும் எவ்வளவோ தெரிந்துகொள்ள முடிகிறது. நாரண. துரைக்கண்ணன் அவர்களது அணிந்துரையில் குறிப்பிடுவதுபோல இது ஒரு வெற்றிப் படைப்பேயாகும்.

ஆசிரியர் தன் முன்னுரையில் தெரிவித்திருப்பதுபோல, அலெக்சாண்டர் என்று எண்ணிக் கொண்டதும், இந்த நூலைப் படித்து முடிந்தபின், 'தாமரைக் கண்ணன்' என்ற ஆசிரியரது பெயரையும் நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது. நூலகங்களுக்கு மட்டுமல்ல; நாடகத் துறையினருக்கு மட்டுமல்ல; அறிவுப்பசியெடுக்கின்ற அனைவருக்குமே இந்நாடக நூல், அரிய விருந்து என்பதில் ஐயமில்லை —அ. சொ.. முத்துராமன்

---

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கண நேரமாவது தமிழ் மாணவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாணவர் சமூகத்தின் பொதுப் பிரச்னைகள், இன்றைக்கு உலகெங்குமே இருந்துகொண்டுதானிருக்கின்றன என்பதுடன், சங்கத் தேர்தல்கள் காரணமாக வன்முறைகள் வளர்க்கப்படுவதன் விளைவுகள் பற்றியும் மாணவக் கண்மணிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாணவர் சங்கங்களை முன்வைத்து அரசியல் கடை வைத்து பிழைப்பு நடாத்த விரும்புவோர், உண்மையிலேயே நாட்டின் வளவாழ்வின் மீது அக்கறை கொண்டிருப்பார்களானல், மாணவர்களைத் தனித்தியங்க விட்டுவிட வேண்டும்.

ஒருவரை யொருவர் குற்றம் கூறிக்கொண்டு, பிரச்னைகளின் பெருக்கத்துக்கு இடமளித்துக் கொண்டே போவதானது, மாணவர்களது வருங் காலத்துக்கும் நல்லதல்ல—இலட்சிய நாட்டுக்கும் நல்லதல்ல.

★

...யர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3